369

Motherland Tamil Reader

BOOK II

OFFICE OF THE REG... MADRA
9 - JAN 1940

BY

Vidwan T. Aiyanperumal Konar

TAMIL PANDIT, ST. JOSEPH'S COLLEGE HIGH SCHOOL;
TRICHINOPOLY.

PUBLISHED BY

THE PIONEER PUBLISHERS

MADRAS

தாய் நாட்டுத்

தமிழ் வாசகம்

இரண்டாம் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 - JAN 1940
MADRAS

திருச்சி ஸெயின்ட் ஜோஸப்ஸ் காலேஜ்ஸ்கூல்
தமிழாசிரியர்
வித்துவான் ஐயன்பெருமாள் கோனார்
இயற்றியது

பயோனீர் பப்ளிஷர்ஸ்
331, தம்பு செட்டித் தெரு, சென்னை

பதிப்புரிமை] 1939 [விலை அணா $3\frac{1}{2}$

THE RAJAN PRESS, MADRAS,

முகவுரை

தமிழகத்தில் தாய்மொழிப் பயிற்சி மிக்கு விளங்கும் இக்காலத்தில் புதுமுறை கொண்டு தமிழ்ப் பாட புத்தகங்கள் பல வெளிவருகின்றன. எவ்வளவு பாட புத்தகங்கள் வெளிவரினும் அவை தமிழ் நாட்டுக்கு வேண்டுவனவே. **தாய் நாட்டுத் தமிழ் வாசகம்** என்னும் இப் பாட புத்தகங்களும் தமிழ்ச் சிறுவர்களுக்குப் பெரும் பயன் அளிக்கும் திறத்தனவாக அமைந்துள்ளன. அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள நூதன முறைப் பாடதிட்டப்படி மிக்க அனுபவத்தாலமைந்த பயனுல் இப்புத்தகங்கள் வெளிவருகின்றன.

இப்பாட புத்தகங்கள் சிறுவர்கள் உள்ளத்தைக் கவர்ந்து கல்வியில் ஊக்கமூட்டிப் படிக்கவேண்டும் என்னும் ஆசையை எழுப்பும் நிலையில், பல சித்திரங்களைக் கொண்டு திகழ்வன. ஒவ்வொரு பாடத்தின் முன்பும் பயின்ற அரிய சொற்களை எடுத்துத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் ஈற்றிலும் வினக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றை ஆசிரியர் வாயால் கேட்டுச் சிறுவர்களை விடைகளைச் சொல்லுமாறு செய்தும், எழுதுமாறு செய்தும் நன்கு பயில்விக்கலாம். அதன்பின் விளங்கும் பயிற்சிகள் பல சிறுவர்களுடைய வீட்டுவேலைக்கும் வகுப்பு வேலைக்கும் ஏற்றனவாயும், எளிய நெறியில் விரைவில் தவறின்றி விஷயங்களை எழுதும் வன்மையை

யளிக்கத் தக்கனவாயும் அமைந்துள்ளன என்பதை நன்கறியலாம். இப்புத்தகங்களிலுள்ள பயிற்சிகள் சிறந்தனவாயும் புதுநெறி பற்றியவையாயும் சிறுவர்களுக்கு எழுதும் ஆற்றலையும் பாஷா ஞானத்தை விருத்தி செய்வனவாயும் அமைந்துள்ளமை இந்நூல்களுள் காணும் அரும் பெருஞ் சிறப்பாகும். அவற்றை அடுத்து, மூன்ருவது வகுப்புமுதல் சிறுவர்க்கு ஏற்றவாறு, பாடதிட்டத்தை ஒட்டிப் பாடத்தைத் துணையாகக்கொண்டு எழுதப்பட்டிருக்கும் இலக்கணவிஷயங்கள் இப்புத்தகங்களை அணிசெய்கின்றன. கதை பொதி பாட்டுக்களும், கதை பொதி சித்திரங்களும், நாட்டுப் பாட்டும், நங்கைப்பாட்டும் செய்யுள் மணிக்கோவைகளும் சிறுவர்கள் விரும்பிப் படிக்கத்தக்கனவும் மனப்பாடம் செய்யத்தக்கனவும் ஆகும்.

இப்புத்தகங்கள் பெரிய எழுத்துக்களில் விசாலமாகவும் அழகாகவும் அச்சிடப்பட்டுள்ளன. இவற்றை மாணவர்கள் படித்து நற்பயன் எய்தி இன்புறுவார்களாக.

ஆசிரியர்.

பொருளடக்கம்

		பக்கம்
1.	பொருள்களின் பெயர்	1
2.	தொடர் மொழிகள்	3
3.	ஒலிகள்	4
4.	விளையாட்டு	5
5.	நல்ல பையன்	6
6.	பாப்பா	7
7.	அடுக்குச் சொற்கள்	9
8.	பெயர் மாறுதல் I	11
9.	படத்தைச் சேர்த்துப் படித்தல்	13
10.	சிறு வாக்கியங்கள்	14
11.	பெயர் மாறுதல் II	16
12.	வசிக்குமிடம்	17
13.	படத்தைப் பார்த்து வார்த்தையை அமைத்து பூர்த்தி செய்தல்	21
14.	சுவைகள்	24
15.	படம் பார்த்து வாக்கியம் எழுதுதல்	25
16.	படம் பார்த்து விடை கூறுதல்	27
17.	பருத்தி	29
18.	சில செயல்கள்	30
19.	கடவுள்	31
20.	சூரியனும் சந்திரனும்	32
21.	வஞ்சகப் பேச்சை நம்பாதே	34

பக்கம்

22.	கிழமைகள்	35
23.	பெரியோர்	36
24.	மலர்கள்	38
25.	மலைகளும், ஆறுகளும்	40
26.	வெண்ணிலா	42
27.	வாகனங்கள்	43
28.	தோட்டம்	47
29.	மிருகங்கள்	48
30.	படம் பார்த்து விடை கூறுதல்—எழுதுதல் ...	51
31.	நன்றியுள்ள நாய்	53
32.	குருடனும் விளக்கும்	55
33.	பறவைகள்	57
34.	உபாயத்தால் ஆகாதது ஒன்றில்லை	60
35.	நரியும், ஆட்டுக்குட்டியும்	62
36.	எங்களது நாடு	64
37.	தபால்	65
38.	படமும் கதையும்	69
	ஆத்திசூடி	70
	உலகநீதி	71
	கடிதம் எழுதுதல்	72

ஔவையார்

36-ம் பக்கம் பார்க்க

அப்பியாசம்—



1. பெயர்களைச் சொல்; எழுது.

2. ஒவ்வொன்றைப்பற்றியும் தெரிந்ததைச் சொல்

1. பொருள்களின் பெயர்



ஒட்டியாணம்.



கூஜா.

பூஞ்செடி.

பழக் கடை.



நகைப் பெட்டி.

காசு மாலை.

பயிற்சி:—1. படி ; எழுது.

1. தந்தச் சிப்பு.
2. சந்தனப் பேலா.
3. கன்றுக் குட்டி.
4. துணிக் குடை.
5. தென்னந் தோப்பு.
6. புலிக் கூண்டு.
7. குங்குமச் சிமிழ்.
8. கோழிக் குஞ்சு.
9. காக்கைக் குஞ்சு.
10. மாதுளம் பழம்.
11. மிட்டாய்க் கடை.
12. வள்ளிக் கிழங்கு.
13. வெள்ளித் தட்டு.
14. எறும்புப் புற்று.
15. சாரைப் பாம்பு.
16. சர்க்கரைப் பொங்கல்.
17. பன்னீர்ப் புட்டி.
18. வாழைத் தோட்டம்.
19. நெருப்புப் பெட்டி.
20. வாழைப் பழம்.
21. ஆற்றங் கரை.
22. குருவிக் கூடு.
23. பட்டுப் புடவை.
24. தென்னம் பிள்ளை.
25. கீரைத் தண்டு.
26. கீரிப் பிள்ளை.
27. கடைத் தெரு.
28. புடலம் பிஞ்சு.
29. பித்தளைப் பாத்திரம்.
30. எலிப் பொறி.
31. வெல்லக் கட்டி.
32. கீழைத் தெரு.

2. தொடர் மொழிகள்



இது ஒரு மேஜை.



இங்கே நான்கு புத்தகங்கள்
இருக்கின்றன.



இவர்கள் படிக்கிறார்கள்.

இவன் துணி தைக்கிறான்.



இவர்கள் ஆட்டம் ஆடு
கிறார்கள்.

இவன் படிக்கிறான்.

3. ஒலிகள்



காக்கை கரையும்.

பூனை கத்தும்.

நாய் குரைக்கும்.

மாடு முக்காரமிடும்.



பன்றி உருமும்.



குதிரை கனைக்கும்.



யானை பிளிறும்.

சிங்கம் கர்ஜிக்கும்.

மயில் அகவும்.

கிளி பேசும்.



4. விளையாட்டு

அண்ணன் பந்து ஆடுகிறான்.
தம்பி ரயில்வண்டி விடுகிறான்.
தங்கை தட்டாமாலை சுற்றுகிறாள்.
கண்ணன் காற்றாடி விடுகிறான்.
கோவிந்தன் கோலி ஆடுகிறான்.
மதுரம் கோலம் போடுகிறாள்.
சிறுமிகள் கோலாட்டம் போடுகிறார்கள்.
இராமன் பம்பரம் ஆடுகிறான்.

5. நல்ல பையன்

நான் காலையில் எழுவேன்.

நான் கடவுளை வணங்குவேன்.

நான் பல்லை விளக்குவேன்.

நான் நன்னீ ராடுவேன்.

நான் பாடம் படிப்பேன்.

நான் பள்ளிக்குப் போவேன்.

நான் குரு சொற் கேட்பேன்.

நான் பெற்றோர்க்குப் பணிவேன்.

நான் நல்லாரோடு இருப்பேன்.

பயிற்சி:—நீ, நீங்கள், அவன், அவர்கள் என்ற சொற்களை, நான் என்பதற்குப் பதிலாக வைத்து எழுது.



6. பாப்பா

இது ஒரு நல்ல பாப்பா.
நன்றாய் விளையாடும் பாப்பா.
வேடிக்கை பார்த்துச் சிரிக்கும் பாப்பா.
கையைக் காலைத் தூக்கும் பாப்பா.
பாப்பா பசித்தால் அழும்.
அம்மா பால் ஊட்டுவாள்.
பொம்மை பார்த்து மகிழும் பாப்பா.
அம்மா பாப்பாவைக் கொஞ்சுவாள்.
எனக்குப் பாப்பாவிடம் அன்பு உண்டு.
பாப்பா இல்லாத வீட்டில் இன்பம் இல்லை.

பயிற்சி:—1.

கோடிட்ட இடங்களில் பாடத்திலிருந்து தகுந்த வார்த்தைகளை எடுத்து எழுது:—

1. பாப்பா——அழும்.
2. இது ஒரு——பாப்பா.
3. அம்மா——ஊட்டுவாள்.

பயிற்சி:—2.

நீ யார்?——நான் ஒரு **சிறுவன்.**

இதைப்போல் விடை சொல்:—

1. உன் பெயர் என்ன?

   என் பெயர் ——

2. நீ எந்த வகுப்பில் படிக்கிறாய்?

   நான் —— —— படிக்கிறேன்.

3. உன் தகப்பனார் பெயர் என்ன?

   என் தகப்பனார் பெயர் ——

4. உன் தகப்பனாருக்கு என்னவேலை?

   என் தகப்பனாருக்கு —— ——

---

7. அடுக்குச் சொற்கள்

1. திராக்ஷை கொத்துக் கொத்தாய் இருக்கும்.
2. அரளி கொத்துக் கொத்தாய்ப் பூக்கும்.
3. விறகு கட்டுக் கட்டாய் விற்கப்படும்.
4. தானியங்கள் குவியல் குவியலாய் வைக்கப்படும்.
5. மாடுகள் மந்தை மந்தையாய் மேய்கின்றன.
6. மக்கள் திரள் திரளாய்க் கூடுகின்றனர்.
7. பறவைகள் கூட்டங் கூட்டமாய்ப் பறக்கின்றன.
8. எறும்புகள் சாரை சாரையாய் ஊர்கின்றன.
9. கண்ணீர் தாரை தாரையாய் வழிகின்றன.
10. மரங்கள் தோப்புத் தோப்பாய் இருக்கின்றன.
11. பிள்ளைகள் வரிசை வரிசையாய்ச் செல்கின்றனர்.
12. பாத்திரங்கள் அடுக்கு அடுக்காய் வைக்கப்படும்.
13. காய் கறிகள் கூறு கூருய் விற்கப்படும்.
14. கொலுவில் பொம்மைகளைத் தனித்தனியாய். வைப்பார்கள்.
15. காப்புகளை ஜதை ஜதையாய் விற்கிருர்கள்.

பயிற்சி:—1. உதாரணம்.

குடம்—குடத்தில் அறை—அறையில்
பெட்டி—பெட்டியில் வீடு—வீட்டில்
வாய்—வாயில் காடு—காட்டில்

மேலே காட்டியுள்ளபடி கீழ்வரும் வார்த்தைகளுக்கு எழுது.

வகுப்பு, கூடை, குளம், பால்,
பை, மைக்கூடு, ஆறு, மரம்,
தொட்டில், மடி, கூடு, காடு.

பயிற்சி:—2. கோடிட்ட இடங்களை நிரப்பு.

நீர் குடத்தில் இருக்கிறது. புலி காட்டில் வசிக்கும்.

1. பணம்——இருக்கிறது.
2. குழந்தை——தூங்குகிறது.
3. மீன்——வசிக்கிறது.

பயிற்சி:—3. கோடிட்ட இடங்களை நிரப்பு.

(உதாரணம்) வகுப்பில் பென்சுகள் வரிசை வரிசையாய்ப் போடப்பட்டிருக்கின்றன.

1. சுவரில் படங்கள்—— ——மாட்டப்பட்டுள்ளன.
2. பீரோவில் புத்தகங்கள்—— ——வைக்கப்பட்டிருக்கின்றன.
3. தேங்காய்—— ——க் காய்க்கும்.
4. வாழைப்பழம்—— ச் ——இருக்கும்.
5. ரோஜாப்பூவில் இதழ்கள்—— ——இருக்கின்றன.
6. சிறுவர்கள்—— —— ப் போகிறார்கள்.
7. திருவிழாவில் ஜனங்கள்—— ——க் கூடுகிறார்கள்.
8. செருப்புக்களை—— ——விற்கிறார்கள்.

8. பெயர் மாறுதல் I.

கிளியைப் பார்.

மிட்டாயைத் தின்.

பலகையை எடு.

பழத்தை உரி.

துணியைக் கிழி.

கந்தனைக் கூப்பிடு.

பலகையைக் கொண்டுவா.

பெயரை எழுது.

பாட்டைப் பாடு.

கணக்கைப் போடு.

குச்சியை நறுக்கு.

துணியை உலர்த்து.

வழியைக் காட்டு.

மரத்தை அறு.

பயிற்சி—1.

கிளி—கிளியை	புத்தகம்—புத்தகத்தை
பலகை—பலகையை	பெயர்—பெயரை
பழம்—பழத்தை	பாட்டு—பாட்டை
துணி—துணியை	கணக்கு—கணக்கை
கந்தன்—கந்தனை	குச்சி—குச்சியை
வழி—வழியை	துணி—துணியை
மரம்—மரத்தை	அப்பம்—அப்பத்தை

பயிற்சி—2. முன் பயிற்சியில் எழுதியபடி கீழ்வரும் பத்து வார்த்தைகளை மாற்றி எழுது.

வீடு	குடம்
அம்பு	பொம்மை
வில்	பந்து
பென்சில்	படுக்கை
சட்டை	நாற்காலி

பயிற்சி:—3. பார், தின், எடு, உரி, கிழி, கூப்பிடு, கொண்டுவா, எழுது, பாடு, போடு, நறுக்கு, உலர்த்து, காட்டு, அறு—இவைகளை அமைத்து மேலே காட்டியபடி, நீ சொந்தமாக எழுது.

பயிற்சி:—4. (உதாரணம்) நான் போனேன். அவன் போனான். நானும் அவனும் போனோம். இதுபோல் மூன்று வாக்கியங்கள் எழுது.

பயிற்சி:—5. உன் வகுப்பறையில் நீ எவற்றைப் பார்க்கிறாய்? எழுது. நீ அணிந்துள்ள ஆடைகளை எழுது.

பயிற்சி:—6. கீழ்வரும் வாக்கியங்களைப் படி; அவற்றுள் எப்பெயர்கள் எப்படி மாறியுள்ளன; எழுது.

1. நான் பாடத்தைப் படித்தேன்.
2. நீ புத்தகத்தை எடுத்தாய்.
3. அவள் பாட்டைப் பாடினாள்.
4. நீங்கள் மோட்டாரைத் தள்ளினீர்கள்.
5. அவர்கள் பழங்களைத் தின்றார்கள்.
6. அது மரத்தைத் துளைத்தது.

9. படத்தைச் சேர்த்துப் படித்தல்



வீதியில் ஓடுகிறது.



தோகையை விரித்து ஆடுகிறது.

எலியைப் பிடிக்கும்.



மிருகங்களுள் சிறந்தது,

காட்டு மிருகங்களில் கம்பீரமானது.



சாக பக்ஷிணி.



நன்றியுள்ள பிராணி.



சுழற்றி விட்டால் சுற்றும்.

10. சிறு வாக்கியங்கள்

சிறுவன் பாடம் படிக்கிறான்.

குடியானவன் தண்ணீர்
இறைக்கிறான்.

தச்சன் மரம் அறுக்கிறான்.

செம்படவன் தூண்டிலால்
மீன் பிடிக்கிறான்.

உபாத்தியாயர் பாடம்
போதிக்கிறார்.

அம்மா சமையல் செய்கிறாள்.

கமலம் ஆர்மோனியம்
வாசிக்கிறாள்.

அம்மா குழந்தையைத் தூக்கிக்
கொஞ்சுகிறாள்.



காக்கை குஞ்சுகளுக்கு இரை
கொடுக்கின்றது.

தங்கை கோழிக்குத் தீனி
போடுகிறாள்.

பயிற்சி:—1. நிரப்பு

சிறுவன்——படிக்கிருன்.

குடியானவன்————.

தச்சன் மரம்——.

——மீன்——.

——பாடம் போதிக்கிருர்.

அம்மா——செய்கிருள்.

பயிற்சி:—2. நான் கத்தியால் சீவினேன்.

நீ பேனுவால் எழுதுகிருய்.

அவன் ஊசியால் தைக்கிருன்.

கீழேவரும் வார்த்தைகளை வைத்து மேலே காட்டியுள்ளபடி எழுது.

உளி,	பென்சில்,	கதவு,	காது,
தடி,	துணி,	ஜன்னல்,	மூக்கு.

பயிற்சி:—4. நல்ல பழக்கம், கெட்ட பழக்கம்—கீழ்வரும் வாக்கியங்களைப் படி. எவை நல்ல பழக்கம்? எவை கெட்ட பழக்கம்? அது அதற்கு நேராக எழுது.

1. நகத்தைக் கடிப்பது
2. காலையில் எழுவது
3. தாயோடு சண்டை போடுவது
4. குளித்தபின் சாப்பிடுவது
5. பகலில் தூங்குவது
6. காகிதத்தைக் கிழிப்பது
7. நாய்மேல் கல் எறிவது
8. காலத்தில் படிப்பது
9. தம்பியைத் துன்பப் படுத்துவது
10. கடவுளை வணங்குவது
11. எளியோரைப் பழிப்பது
12. மழையில் நனைவது

நல்ல பழக்கம்	கெட்ட பழக்கம்

11. பெயர் மாறுதல் II.

மாட்டுக்குப் புல்லைப் போடு.
சிறுவனுக்கு மிட்டாயைக் கொடு.
யானைக்குக் கரும்பைக் கொடு.
நோய்க்கு மருந்து கொடு.
செடிக்குத் தண்ணீர் ஊற்று.
ஏழைக்குச் சோறு போடு.
நாளைக்கு வருவதாய்ச் சொல்.
பெரியோர்க்குப் பணிந்து நட.
வண்டிக்கு வாடகை பேசு.
தெய்வத்திற்குப் பயந்து ஒழுகு.

பயிற்சி :—1.

மாடு—மாட்டுக்கு	ஏழை—ஏழைக்கு
சிறுவன்—சிறுவனுக்கு	நாளை—நாளைக்கு
யானை—யானைக்கு	பெரியோர்—பெரியோர்க்கு
நோய்—நோய்க்கு	வண்டி—வண்டிக்கு
செடி—செடிக்கு	தெய்வம்—தெய்வத்திற்கு

பயிற்சி :—2. மேலே காட்டியுள்ளபடி கீழ்வரும் வார்த்தைகளை மாற்றி எழுது.

பையன்	தந்தை
வாழை	நாய்
கூலி	குதிரை
உபாத்தியார்	தீனி
மனிதன்	வாசனை

12. வசிக்குமிடம்



எவை எவை எங்கெங்கு வசிக்கும்?

வீட்டில், காட்டில், புற்றில், நீரில், பொந்தில், மரத்தில்.

உதாரணம் :—பசு வீட்டில் வசிக்கும்.

1. சிங்கம் —— ,,
2. புலி —— ,,
3. கரடி —— ,,
4. பாம்பு —— ,,
5. குரங்கு —— ,,
6. குருவி —— ,,
7. ஆமை —— ,,
8. கோழி —— ,,
9. நாய் —— ,,
10. தவளை —— ,,
11. கழுகு —— ,,
12. மீன் —— ,,
13. எறும்பு —— ,,
14. ஈ —— ,,
15. ஆடு —— ,,
16. எருமை —— ,,
17. எலி —— ,,
18. பூனை —— ,,

13. படம் சேர்த்துப் படித்தல்

வியாபாரம் செய்கிறான்.

வேடிக்கை காட்டுகிறான்.

தெருவில் விற்கிறான்.

பாடம் படிக்கிறார்கள்.

பயிற்சி :—1. வியாபாரம், விற்றல், பாடுதல், காட்டுதல், படித்தல், வேலை செய்தல், வேடிக்கை, பாட்டு.

மேல்கண்ட சொற்களை ஏற்ற விடத்தில் அமைத்துக் காட்டு :—

(1) கந்தன்——செய்கிறான்.
(2) பொன்னன் பழம்——.
(3) கமலம் பாட்டுப்——.
(4) மாலையில் ஸினிமா——.
(5) சிறுவர்கள் பாடம்——.
(6) ஏழைகள்——.
(7) ——பார்த்து நிற்காதே.
(8) பள்ளிக்கூடத்தில்—— ——ப் பாடுவது உண்டு.



14. நிறங்கள்

1. காக்கை கருமை நிறம்.
2. பால் வெண்மை நிறம்.
3. இரத்தம் சிவப்பு நிறம்.
4. இலை பச்சை நிறம்.
5. ஆகாயம் நீல நிறமானது.
6. மஞ்சள் மஞ்சள் நிறம்.
7. தங்கம் மஞ்சள் நிறம்.
8. கழுதை சாம்பல் நிறம்,

பயிற்சி :—1. நிறங்கள் எத்தனை? எழுது.

2. என்ன என்ன நிறங்களை உடைய பூக்களை நீ பார்த்திருக்கிறாய்?

15. படத்தைப் பார்த்து வார்த்தையை அமைத்துப் பூர்த்தி செய்தல்



பயிற்சி :—1. கோடிட்ட இடத்தில் நிரப்பு.

படம் 1. சிறுவன்——காற்றுடி விட்டுக்கொண்டிருந்தான்.

2. காற்றுடி —— ப் பறந்தது; சிறுவன் —— யே கவனித்துக் கொண்டிருந்தான்.

3. இரண்டு —— கள் அவனோடு —— வேடிக்கை பார்த்தனர்.

4. பின்னல்——வண்டி——யும் சிறுவன்——வில்லை.

5. வண்டிக்காரன்——யை நிறுத்த லகானை——ப் பிடித்தான்.

6. குதிரை——க் கீழே தள்ளி——விட்டது.

7. இருவர்——ப் பார்த்து——வந்தனர்.

8. இருவரும் அச்——த் தூக்கிச் சென்றனர்.

9. சிறுவனை வைத்தியசாலையில் சேர்த்தனர். வைத்தியர் சிறுவனுக்குக்——க்கள் கட்டிக் காயத்தை ஆற்றினர்.

நீதி :—தெருவில்——பராக்குப்——க் கொண்டு——அபயமானது.

பயிற்சி :—2. படத்தில் காண்பவைகளை வைத்துக்கொண்டு ஒரு கதையாக எழுது.

பயிற்சி :—3. முன் படத்தைப் பார்த்து அதனல் அறியும் நீதி யாது?

பயிற்சி :—4. தெருவில் விளையாடக்கூடாது என்பதற்குக் காரணங்கள் என்ன?

16. சுவைகள்

நாம் நாவினுல் சுவை அறிகிருேம். சுவை அறிவதை ருசி பார்த்தல் என்பார்கள். நாம் உட்கொள்ளும் உணவுப் பொருள்கள் சுவை நிறைந்தன அல்லவா ? சுவைகள் ஆறு வகைப்படும்.

அவை :—திதிப்பு, புளிப்பு, கரிப்பு, துவர்ப்பு, கசப்பு, காரம் என்பனவாம்.

பாயசம்	திதிக்கிறது.
புளி	புளிக்கிறது.
உப்பு	கரிக்கிறது.
வாழைப்பூ	துவர்க்கிறது.
பாகற்காய்	கசக்கிறது.
மிளகாய்	காரமாயிருக்கும்.

திதிப்பை இனிப்பு என்கிருேம். கரிப்பைக் கரித்தல் என்கிருேம். காரத்தை உறைக்கிறது என்கிருேம். அறுசுவை உணவை உட்கொள்வதால் நம் உடல் பலத்தைப் பெறுகிறது.

பழங்கள் இனிப்பாக இருக்கின்றன. நாம் விருந்து சாப்பிடும்போது அநேக சுவையுள்ள பதார்த்தங்களேச் சாப்பிடுகிருேம் அல்லவா? குழந்தைகள் இனிப்பான மிட்டாய்களே விரும்பி உண்கின்றன. துவர்ப்பு, கசப்பு, கரிப்பு முதலான பொருள்களே அதிகமாய் உண்ண முடியாது. கடல் நீர் உப்புக் கரிப்பதால் குடிப்பதில்லே.

பயிற்சி :—2. கீழ்வரும் பொருள்களின் சுவைகளை அது அதற்கு நேராக எழுது.

திதிப்பு	புளிப்பு	கரிப்பு	துவர்ப்பு	காரம்	கசப்பு

1. மிளகு
2. கற்கண்டு
3. எலுமிச்சம்பழம்
4. மாம் பிஞ்சு
5. வேப்பிலை
6. இஞ்சி
7. கரும்பு
8. நாரத்தை
9. வெந்தயம்
10. ஹல்வா
11. மாங்காய்
12. எட்டிக்காய்
13. உப்பு
14. பாக்கு
15. லட்டு
16. வாழைப்பழம்
17. பச்சை மிளகாய்
18. சோடா

பயிற்சி :—1. விருந்து சாப்பிடச் சென்றால் என்ன என்ன சுவைகளையுடைய பதார்த்தங்களைச் சாப்பிடு வாய் என்பதை எழுது.

2. மிட்டாய்க் கடையில் காணும் இனிப்பான பதார்த்தங்கள் எவை? காரமான பதார்த் தங்கள் எவை?

17 படம்பார்த்து வாக்கியம் எழுதுதல்

ஒவ்வொரு படத்தையும் பார்த்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.

பயிற்சி :—1. படி; எழுது.

1. மழை பெய்தால் குடை பிடித்துக்கொள்.
2. சிறுவன் யானையைக் கண்டு ஆச்சரியப்படுகிறான்.
3. தெருவில் சிறுவர் பம்பரம் விளையாடுவர்.
4. பலூன்காரனைச் சிறுவர் சூழ்ந்திருக்கின்றனர்.
5. ஓரமாய்த் தெருவில் நட; இல்லாவிட்டால் ஆபத்து உண்டாகும்.
6. தேர்த் திருவிழாவில் ஜனக் கூட்டம் அதிகம்.
7. பசுக்கள் மந்தை மந்தையாய் மேய்கின்றன.
8. காகங்கள் உணவை இனத்தோடு உண்ணும்.
9. நாய்கள் திருடர்களைக் கண்டால் குரைக்கும்.
10. கோழி, குஞ்சுகளை அன்போடு பாதுகாக்கின்றது.
11. குரங்குகள் தாவிச் செல்வது வேடிக்கைதானே?
12. எறும்புகள் அழகாய் வரிசை வரிசையாய் ஊர்ந்து செல்வதைப் பார்.

பயிற்சி :—2. ஆச்சரியம், ஆபத்து, அன்போடு, உழைப்பு இவற்றை அமைத்து வாக்கியங்கள் சொல்லு.

பயிற்சி :—3. இவர்கள் தொழிலை எழுது.

உபாத்தியாயர்	தச்சன்	குருக்கள்
தையல்காரன்	தட்டான்	வக்கீல்
குடியானவன்	வண்ணான்	போலீஸ்காரன்

18. படம் பார்த்து விடை கூறுதல்

படத்தைப் பார்த்துக் கேள்விகளுக்கு விடை கூறுக; எழுது.

படம் 1

1. காக்கைக் குஞ்சுகள் எங்கே இருக்கின்றன?
2. அவை எத்தனை? காகங்கள் எத்தனை?
3. தாய்க்காகம் என்ன செய்கிறது?
4. காகங்கள் எங்கே உட்கார்ந்திருக்கின்றன?

பயிற்சி:—1. குஞ்சு, கூடு, கிளை இவற்றை அமைத்து மூன்று வாக்கியங்கள் எழுது.

படம் 2.

1. மரத்தின் கிளையிலிருப்பது யார்? என்ன செய்கிருன்?
2. சிறுவன் கைகளில் இருப்பன என்ன?
3. மரத்தின்கீழ் நீ என்ன பார்க்கிருய்?

பயிற்சி:—2. சிறுவன், சிறுமி, தருகிருன், வாங்குகிருள், இவற்றை அமைத்து வாக்கியங்கள் எழுது.

படம் 3.

1. சிறுவன் எங்கே உட்கார்ந்திருக்கிருன்?
2. அவன் யாது செய்கிருன்?
3. சிறுவனுக்குப் பின்னுல் நிற்பது யார்?
4. இருவருக்கும் பக்கத்தில் இருப்பது என்ன?

பயிற்சி:—3. கரையோரம், தூண்டில், மீன்பிடி, நீரில் வளையங்கள்—இவற்றை அமைத்து வாக்கியங்கள் எழுது.

படம் 4,

1. சிறுவன் என்ன செய்கிருன்?
2. மரக்கிளையிலிருந்து தொங்குவது யாது?
3. சிறுமி என்ன செய்கிருள்?
4. அவள் சிறுவனுக்கு எப்பக்கத்தில் இருக்கிருள்?

பயிற்சி:—4. தொங்குவது, ஆட்டுதல், முன்புறம், பின்புறம் வலப்புறம், இடப்புறம்—இவைகளை அமைத்து வாக்கியங்கள் எழுது.

19. பருத்தி

பருத்தி - செடியில் காய்க்கிறது; காய்களைப் பறிக்கிறார்கள்; பின் உலர்த்துகிறார்கள். பிறகு காயை உடைத்துப் பஞ்சு எடுத்து, ராட்டினத்தாலும், தக்களியாலும் நூல் நூற்கிறார்கள். நூலைத் தறியிலிட்டுத் துணி நெய்கிறார்கள். இதுவே கதர் எனப்படும். ஜவுளிக்கடையில் நாம் துணிகளை வாங்குகிறோம். இயந்திரத்தினாலும் நூல் நூற்று ஆடை நெய்கிறார்கள்.

20. சில செயல்கள்

பார் :— நான் படத்தைப் பார்த்தேன்.
நீ எதைப் பார்க்கிருய் ?
அவன் யானையைப் பார்த்தான்.

உண் :— நான் சோற்றை உண்டேன்.
நீ எப்பொழுது உண்பாய் ?
அவன் சோறு உண்கிருன்.

தின் :— நான் மிட்டாய் தின்றேன்.
நீ மிட்டாய் தின்கிருய்.
அவன் மிட்டாய் தின்பான்.

நட :— நான் சாலையில் நடக்கிறேன்.
நீ வழியில் நடக்கிருய்.
அவன் தெருவில் நடந்தான்.

கேள் :— நான் கதை கேட்டேன்.
நீ பாடத்தைக் கேட்கிருய்.
அவன் சொல்வதைக் கேட்பான்.

பயிற்சி :— மேலே காட்டியுள்ளபடி, கீழே வரும் சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது.

மூடு, திற, குடி, வாங்கு, ஓடு, நில், செல், எழுது, அனுப்பு, ஏறு, இறங்கு, படி.

21. கடவுள்

1, உலகைப் படைத்தவர் கடவுள்.
2. அவர் எல்லாம் வல்லவர்; எங்கும் நிறைந்தவர்.
3 அவர் ஆக்கவும் காக்கவும் அழிக்கவும் வல்லவர்.
4. கடவுளை நம்பினோர் கைவிடப் படார்.
5. அவர் அன்றி ஓர் அணுவும் அசையாது.
6. கல்வியும் செல்வமும் அளிப்பவர் அவரே.
7. கடவுளை வணங்குவோர், விரும்புவதைப் பெறுவர்.
8. காலை மாலை கடவுளை வணங்கவேண்டும்.
9. ஆலயந் தொழுவது சாலவும் நன்று.
10. 'எல்லாம் தெய்வச் செயல்' என்பது பழமொழி.

பயிற்சி :—1. படைத்தல், வல்லவர், நிறைதல், அசைதல், இவற்றை அமைத்து வாக்கியங்கள் எழுது.

பயிற்சி :—2. கடவுளைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.

பயிற்சி :—3. கோடிட்ட இடங்களில் வார்த்தைகளை நிரப்பு.

1. அவர்——நிறைந்தவர்.
2. அவர்——ஓர்——அசையாது.
3. கடவுளை நம்பினோர்——ப்படார்.
4. ஆலயம்——சாலவும்——.

பயிற்சி :—4. அன்பு, பக்தி, விசுவாசம் — இவற்றை அமைத்து வாக்கியங்கள் எழுது.



22. சூரியனும் சந்திரனும்

1. நாம் பகலில் சூரியனைப் பார்க்கிறோம்.

2. இரவில் சந்திரன் பிரகாசிக்கிறான்.

3. பகலும் இரவும் சேர்ந்தது ஒரு நாள்.

4. சூரிய வெளிச்சத்தை வெயில் என்கிறோம்.

5. சந்திரன் ஒளிக்கு நிலா என்று பெயர்.

6. வெயில் உஷ்ணமானது; நிலா குளிர்ச்சியானது.

7. இரவில் நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கின்றன.

8. சூரியன் உதிப்பது கிழக்குத் திசை; மறைவது மேற்குத் திசை.

9. காலையில் சூரியனைப் பார்த்து நின்றால் வலப் பக்கம் தெற்கு; இடப்பக்கம் வடக்கு.

10. கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு எனத் திசைகள் நான்கு. இவை நால்திசை எனப்படும்.

11. சென்னைக்குக் கிழக்கே கடல் இருக்கிறது.

12. உங்கள் பள்ளிக்கூடத்திற்குக் கிழக்கிலும் மேற்கிலும் இருப்பவை என்ன?

தலை வைத்துப் படு :—

"தன்னூர் கிழக்கு
தங்கின ஊர் மேற்கு
அயலூர் வடக்கு."

கேள்விகள் :—1. ஒரு நாள் என்று எதற்கு பெயர்?

1. நிலவைத் தருவது எது?

3. திக்குகள் எத்தனை? எழுது?

4. திக்கு—இதற்கு வேறொரு பெயர் எழுது?

பயிற்சி :—1. எந்தத் திக்கில் தலை வைத்துப் படுக்கக் கூடாது?

பயிற்சி :—2. கோடிட்ட இடங்களை நிரப்பு.

1. இரவில் ——பிரகாசிக்கிறான்.

2. சூரிய——வெயில்——.

3. நாம்——சூரியனைப்——.

பயிற்சி :—3. உஷ்ணம், குளிர்ச்சி, உதித்தல், மறைதல்—இவற்றை அமைத்து வாக்கியங்கள் எழுது.

பயிற்சி :—4. இப்பாடத்தின் தலைப்பிலுள்ள படத்தைப் பார்த்து நான்கு வாக்கியங்கள் எழுது.

23. வஞ்சகப் பேச்சை நம்பாதே



ஒரு கிழவி வடைக்கடை வைத்திருந்தாள். ஒரு காகம் வந்து அவள் ஏமாந்திருந்த போது வடை ஒன்றைக் கௌவிக்கொண்டு சென்றது.



காகம் வாயில் வடையோடு பறந்தது. அதை ஒரு நரி பார்த்தது. காகம் மரத்தின் கிளையில் உட்கார்ந்தது. நரி அங்குச் சென்றது.

நரி காக்கையைப் பார்த்து, "நீ மிகவும் அழகாய் இருக்கிறாய். உன் குரலும் இனிமையாய் இருக்கும் அல்லவா? ஒரு பாட்டுப் பாடு; கேட்போம்," என்றது.



காக்கை பெருமை கொண்டது. அது வாயைத் திறந்து பாடத் தொடங்கியது. வடை கீழே விழுந்தது. நரி எடுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தது. காகம் ஏமாந்தது.

24. கிழமைகள்

முருகன் :—எனக்கு நாளைக்கு விடுமுறை.

கந்தன் :—நாளைக்கு எனக்கும் விடுமுறைதான். முருகா, நாம் பொருட் காட்சிச் சாலைக்குப் போகலாமா ?

முருகன் :—நல்லது போகலாம். ஞாயிற்றுக் கிழமை எங்கள் மாமா வருவார்.

கந்தன் :—என் அண்ணன் திங்கட்கிழமை வருகிறான்.

முருகன் :—செவ்வாய்க்கிழமை எங்கள் பள்ளிக் கூடத்திற்கு இன்ஸ்பெக்டர் வரப்போகிறார்.

கந்தன் :—புதன்கிழமை எங்கள் பள்ளிக்கூடத்தில் நாடகம் நடித்தப் போகிறார்கள்.

முருகன் :—வியாழக்கிழமை ஸ்ரீஜயந்தி; அதாவது கிருஷ்ணன் பிறந்த நாள். அதனால் விடுமுறை உண்டு.

கந்தன் :—வெள்ளிக்கிழமை எங்கள் வீட்டில் விருந்து வைப்பார்கள்.

முருகன் :—சனிக்கிழமை நான் எண்ணெய் தேய்த்து நீராடுவேன்.

கந்தன் :—இந்த வாரம் நமக்கு நல்ல வேலை இருக்கிறது.

வாரம் ஒன்றுக்கு நாள்கள் ஏழு	ஞாயிற்றுக்கிழமை	வியாழக்கிழமை
	திங்கட்கிழமை	வெள்ளிக்கிழமை
	செவ்வாய்க்கிழமை	சனிக்கிழமை
	புதன்கிழமை	

பெரியோர்



இவர்தான் மகாத்மா காந்தி. இவர் தேசத்திற்காக யாவற்றையும் துறந்தவர். இவர் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபடுகிறுர். இவர் சாந்தமே வடிவமாக விளங்குகிறுர்.

இவர் பெயர் பால கங்காதர திலகர். இவரை அறியாதவர் எவரும் இல்லே. இவர் நாட்டின் நலத்திற்காக உழைத்தவர்; கல்வியில் மிகச் சிறந்தவர்.

கோபால கிருஷ்ண கோகலே என்பது இவர் பெயர். இலவசக் கட்டாயக் கல்விக்காக இவர் பாடுபட்டார்.

ஔவையார் என்பவர் இவரே. இவர், நாம் படிக்கப் பல நீதி நூல்களே எழுதி யிருக்கிறுர். 'ஆத்திசூடி' என்னும் நூலே இவர் இயற்றினுர். இவர் எழுதிய நீதிநூல்களே யாவரும் படிக்க வேண்டும்.

பயிற்சி :—1. காந்தி, ஔவையார், திலகர், கோகலே—இவர்களைப்பற்றி ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

பயிற்சி :—2. தீண்டாமை, பாடுபடு, நாட்டு நலம், உழைத்தல், கட்டாயக் கல்வி, இலவசம், நீதி நூல், இயற்று—இவைகளை அமைத்து வாக்கியங்கள் தனித்தனியாக எழுது.

பயிற்சி :—3. உதாரணம் :—எழுது

நான் எழுதுகிறேன்—நீ எழுதுகிறாய்.
நான் எழுதினேன்—நீ எழுதினாய்.
நான் எழுதுவேன்—நீ எழுதுவாய்.

அவன் எழுதுகிறான்—அவள் எழுதுகிறாள்.
அவன் எழுதினான்—அவள் எழுதினாள்.
அவன் எழுதுவான்—அவள் எழுதுவாள்.

இவற்றைப்போல் கீழ்வரும் சொற்களை மாற்றி எழுது.

கூப்பிடு, செய், பாடு, வாசி, பேசு, கூறு.

பயிற்சி :—4. கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள பிழையைத் திருத்து :—

1. அவன் அழுதேன்.
2. அவள் சமைக்கிறான்.
3. நான் பேசினாய்.
4. நீ வாங்கினாள்.
5. அவள் பாட்டுப் பாடினான்.
6. மிருகம் இரண்டு கால் உடையது.

26. மலர்கள்

தாமரை மலர் அழகானது.
மகிழம் பூவிற்கு மணம் அதிகம்.
மல்லிகை மலர் வெண்மை நிறம்.
ரோஜா, மலர் மலர்களுள் ராஜா.
மஞ்சள் சாமந்தி மலரைப் பார்த்திருக்கிறாயா ?
அலரி மலர் கொத்துக்கொத்தாய் இருக்கும்; நிறம் சிவப்பு.
அல்லி, நீலம், குவளை, தாமரை என்பன நீர்ப் பூக்கள்.
மல்லிகை, முல்லை என்பன கொடிப் பூக்கள்.
செடியில் மலரும் பூ நிலப்பூ.
ரோஜா, அலரி முதலியன நிலப் பூக்கள்.
மரக் கொம்புகளில் மலரும் பூக்கள் கோட்டுப் பூக்கள்.
மகிழம்பூ கோட்டுப் பூ.
தாழம்பூ பார்த்திருக்கிறாயா ?



கேள்விகள் :—1. பூக்கள் எத்தனை வகைப்படும்? யாவை?

2. வெண்மையான மலர்கள் எவை?

3. மணமுள்ள மலர்கள் எவை?

4. நீ பார்த்திருக்கிற நான்கு பூக்களின் பெயர்களை எழுது.

பயிற்சி :—1. கொத்துக் கொத்தாய், வரிசை வரிசையாய், குலைகுலையாய், தனித் தனியாய், கூட்டங் கூட்டமாய்—இவற்றை அமைத்து வாக்கியங்கள் சொல்லு; எழுது.

பயிற்சி :—2. கோடிட்ட இடங்களை நிரப்பு.

பச்சை, வெள்ளை, மஞ்சள், நீலம், கறுப்பு, சிவப்பு.

மல்லிகைப்பூ வெண்மை நிறமானது.

வெள்ளி —— ——.

சாமந்திமலர் —— ——.

ஆகாயம் —— ——.

பொன் —— ——.

காக்கை —— ——.

இலை —— ——.

இரத்தம் —— நிறமானது.

பயிற்சி :—3. வெள்ளை எருது, சிவப்பு மாடு, கரிய குரங்கு, நீல மேகம், பச்சை வாழை, மஞ்சள் காகிதம், —இவைபோல் ஆறு எழுது.



17. மலைகளும் ஆறுகளும்

1. மலைகள் வெகு உயரமானவை.
2. மலைகளில் மரங்கள் நிறைந்த காடுகள் அதிகம்.
3. தேக்கு, சந்தன மரங்கள் மலைகளில் வளர்கின்றன.
4. மலைகளில் ஆறுகள் உற்பத்தியாகின்றன.
5. மலைகளில் புலி, யானை. கரடி முதலிய கொடிய மிருகங்கள் வசிக்கின்றன.
5. குன்றுகள் உயரத்தில் குறைந்தவை
6. மலைகளில் பெரியது இமயமலை.
7. இமயமலை இந்தியாவின் வடக்கே இருக்கிறது.
8. சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா என்னும் ஆறுகள் இமயமலையில் உற்பத்தியாகின்றன.
9. ஆறு இருப்பதால் பயிர்கள் செழிக்கும்.
11. பயிர் செழிக்க நாட்டில் செல்வம் பெருகும்.

12. ஆறுகள் மலைகளிலிருந்து விழுவதற்கு நீர் வீழ்ச்சி என்று பெயர்.



கேள்விகள் :—1. எதற்கு மலைகள் என்று பெயர்?
2. மலைகளில் எவை வளர்கின்றன?
3. ஆறுகள் எங்கே உற்பத்தியாகின்றன?
4. இமயமலையில் உற்பத்தியாகும் ஆறுகள் எவை?
5. எதற்கு நீர் வீழ்ச்சி என்று பெயர்?

பயிற்சி :—1. மட்டம், உயரம், உற்பத்தி, வளப்பம், செழிக்கும், செல்வம், பெருகும், விழுவது, உண்டாக்குதல், எரித்தல், ஓட்டுதல் — இவற்றை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுது.

பயிற்சி :—2. மலையைப் பற்றி ஐந்து வரிகள் எழுது.



28. வெண்ணிலா

வட்ட வடிவமொடு வெண்ணிலாவே—நீ
வெட்ட வெளி வந்ததென்ன வெண்ணிலாவே.

உலகோர் உவப்ப வந்த வெண்ணிலாவே—நீ
ஊர்ந்து வரும் அழகுடையாய் வெண்ணிலாவே.

மக்களை மகிழச் செய்யும் வெண்ணிலாவே—நீ
மான்கறையை ஏற்றதென்ன வெண்ணிலாவே

பிறைச் சந்திரன் ஆனதுவும் வெண்ணிலாவே—நீ
பேசு மீசன் தரித்திடவோ வெண்ணிலாவே.

மாசத்தொரு முறையில் வெண்ணிலாவே—நீ
மறைந்துதான் வருவதென்ன வெண்ணிலாவே.

பால்போலும் ஒளிபரப்பி வெண்ணிலாவே—நீ
பாரினை மகிழச் செய்வாய் வெண்ணிலாவே.

29. வாகனங்கள்

வாகனங்கள் மனிதனுக்கு முக்கியமானவை. ஓர் ஊரிலிருந்து மற்ருேர் ஊருக்குப் போக அவை உதவும். சில வாகனங்கள் ஓர் இடத்திலிருந்து மற்ருேர் இடத்திற்குப் போக உபயோகப்படுகின்றன.



இது ரிக்ஷா வண்டி. இதில் ஒருவர் அல்லது இருவர் ஏறிச் செல்லலாம். இதை மனிதன் இழுக்கிருன்.

இது ஒற்றை மாட்டு வண்டி. இதில் நால்வர் ஏறிச் செல்லலாம். இதற்குக் கூடு உண்டு. அது உள்ளே இருப்பவர்மீது மழையும் வெயிலும் படாமல் காக்கும். இரண்டு மாடுகள் இழுக்கும் வண்டிக்கு இரட்டை மாட்டு வண்டி என்று பெயர்.





இது குதிரை வண்டி. இதனைக் குதிரை இழுக்கின்றது. குதிரை வண்டி வேகமாய்ச் செல்லும்.



இது சைகில் எனப்படும். இது இரண்டு சக்கரங்களை யுடையது. இதன் இரண்டு சக்கரங்களிலும் காற்று அடைத்த ரப்பர்க் குழாய் போடப்பட்டிருப்பதைப் பார்.



இது மூன்று சக்கரங்களை உடைய சிறிய சைகிள் வண்டி. இது சிறுவர்களுக்கு உதவும்.

மோட்டார் கார் என்று இதற்குப் பெயர். இது யந்திரத்தால் ஓடுகிறது. இதற்குப் 'பெட்ரோலியம்' என்னும் எண்ணெய் ஊற்றுவார்கள்.





இது ரயில் வண்டி. இது நீராவியால் ஓடுகிறது. இதில் வெகு தூரம் பிரயாணம் செய்யலாம். இது தண்டவாளத்தின் மீது ஓடும். இதற்கு நிலக்கரி வேண்டும்.

இது ஆகாய விமானம். இது ஆகாயத்தில் பறந்து செல்லும். இதை ஏரோபிளேன் என்று கூறுவர். நீ பலூன் விடுவதைப் பார்த்திருக்கிருயா ?





இதைப் படகு என்று கூறு வர். இது ஆற்றைக் கடக்க உதவும். இராமர் கங்கையாற்றைப் படகில் ஏறிக் கடந்தார்.



இது கப்பல் எனப்படும். இது நீராவியால் செலுத்தப் படுகிறது. வெகு தூரத்திலுள்ள தேசங்களுக்கு இதில் செல் வார்கள்.

கேள்விகள் :—1. உனக்குத் தெரிந்த வண்டிகளின் பெயர் களை எழுது.

2. நீ எந்த எந்த வண்டிகளில் பிரயாணம் செய்திருக்கிறாய்?

3. உங்கள் வீட்டில் என்ன வண்டி இருக் கிறது ?

பயிற்சி :—1. மெதுவாய்ப் போகும் வண்டிகள் எவை ?

2. வேகமாய்ப் போகும் வண்டிகள் எவை ?

பயிற்சி :—2. கோடிட்ட இடங்களில் ஏற்ற வார்த்தைகளை நிரப்பு. (மெல்ல, வேகமாய், வேகம்.)

மாட்டு வண்டி——ப் போகும்.

குதிரை வண்டி——ப் போகும்.

ஸைக்கில் வண்டி——ப் போகும்.

மோட்டார் வண்டிக்கு——அதிகம்.

ரயில் வண்டிக்கு——அதிகம்.



30. தோட்டம்

பல மரங்களும் செடிகளும் தோட்டத்தில் இருக்கும். தென்னை, பாக்கு, மா, பலா, வாழை, முதலிய மரங்கள் முக்கியமானவை.

தென்னையும் பாக்கும் ஒரே வகையான மரங்கள். தென்னை மரம் தேங்காய் கொடுக்கிறது.

தென்னை ஓலை வீடு மேய உதவும். வாழை மரத்தின் இலை, காய், பூ, பழம், தண்டு என்பவை யாவும் நமக்கு உதவும். பாக்கு மரம் பாக்கு அளிக்கின்றது. பாக்குப் பட்டையில் சாப்பிடுவது உண்டு. பாக்கு மரத்தைக் கமுகு என்றும் அழைப்பார்கள்.

மாங்காயும் மாம்பழமும் நமக்குப் பெரிதும் பயன்படும். மாவிலை தோரணங் கட்ட உதவும். பலாப் பழம் மிகவும் இனிமையானது. பலாக்காயைச் சமைத்துச் சாப்பிடலாம்.

கேள்விகள் :—1. தோட்டம் என்றால் என்ன?

2. தோட்டத்திலுள்ள மரங்களில் சிலவற்றை எழுது?

3. கிளைகளுள்ள மரங்கள் எவை? கிளைகளில்லாத மரங்கள் எவை?

4. நான்கு வகைப் பழங்களின் பெயர்களை எழுது.

5. ஒரே வகையான மரங்கள் எவை?

6. மேஜை, நாற்காலி, கதவு என்பன எந்த மரத்தால் செய்யப்படுகின்றன?

பயிற்சி :—1. கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள பிழைகளைத் திருத்தி எழுது.

1. சூரியன் மேற்கில் உதிக்கிறான்.
2. சூரியன் கிழக்கில் மறைகிறான்.
3. சூரியன் இரவில் பிரகாசிக்கிறான்.
4. நக்ஷத்திரங்கள் பகலில் பிரகாசிக்கின்றன.

பயிற்சி :—2. மா, வாழை, தென்னை — ஒவ்வொன்றைப் பற்றியும் மூன்று வரிகள் எழுது.

பயிற்சி :—3. தென்னை மரத்தின்——வீடு——உதவும்.

பாக்கு——அளிக்கின்றது.

மாவிலை——உதவும்.

வாழைப்——தின்னச் சுவையாய் இருக்கும்.

மேலே கண்ட வாக்கியங்களில் ஏற்ற சொற்களை அமைத்து எழுது.

31. மிருகங்கள்



மிருகங்கள் குட்டி போட்டுப் பால் கொடுக்கும். மிருகங்களை வீட்டு மிருகங்கள் என்றும் காட்டு மிருகங்கள் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம்.

மாடு, பசு, குதிரை, ஆடு, நாய், பூனை என்பன வீட்டு மிருகங்கள்.

யானை, மான், புலி, கரடி சிங்கம் ஓநாய் முதலி யன காட்டு மிருகங்கள்.

மாடு வண்டி இழுக்க உதவும். ஏர் உழுவதற்கும் மாடு உபயோகமாகிறது. பசு பால் கொடுக்கின்றது. குதிரை வண்டி இழுக்கும். அதன்மீது ஏறிச் சவாரி செய்வதும் உண்டு. எருமை பால் கொடுக்கிறது. பாலி லிருந்து தயிரும், வெண்ணெயும் கிடைக்கின்றன. நாய் நன்றியுள்ள பிராணி. அது காவல்காக்க உதவும். பூனை வீட்டில் வசிக்கும்; எலி பிடிக்கும்.

ஒட்டகம் என்பது ஒரு மிருகம். அதன்மீது ஏறிக்கொண்டு அரேபியர்கள் பாலைவனத்தைக் கடக் கிறார்கள். ஒட்டகம் வேப்பிலையை விரும்பித் தின்னும்.

மிருகங்களில் மிகப் பெரியது யானை. அதன் கொம்புக்குத் தந்தம் என்று பெயர். தந்தம் மிகவும் விலை உயர்ந்தது. ஆதலால், 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்' என்பர். யானையைப் பழக்கினால் அது பல வேலைகள் செய்யும்.

புலி, சிங்கம் முதலியன கொடிய மிருகங்கள். அவை விலங்குகளைக் கொன்று தின்னும். சிங்கம் மிருகங்களுக்கு ராஜா. ஆதலால் அதற்கு மிருகேந் திரன் என்று பெயர்.

கரடியும் மானும் காட்டு மிருகங்கள். ஆயினும் அவை மாமிசம் தின்பதில்லை. மாமிசம் தின்னும்

மிருகங்களை மாமிச பக்ஷிணி என்றும், மாமிசம் தின்னாத மிருகங்களைச் சாக பக்ஷிணி என்றும் கூறுவர்.

கேள்விகள் :—1. மிருகங்கள் எத்தனை வகைப்படும் ?
2. உபயோகமுள்ள மிருகங்கள் எவை ?
3. யானையைப்பற்றி மூன்று வரிகள் எழுது ?
4. காட்டு மிருகங்கள் எவை ?
5. மிருகேந்திரன் என்று எதற்குப் பெயர் ?

பயிற்சி :—1. சவாரி, காவல், தந்தம், இவைகளை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுது.

பயிற்சி :—2. கோடிட்ட இடங்களை நிரப்பு.

1. மிருகங்களில்——யானை.
2. தந்தம்——உயர்ந்தது.
3. சிங்கம்——களுக்கு——
4. ——யும்——காட்டு மிருகங்கள்.
5. நாய்——பிராணி.
6. ——காவல்——உதவும்.

பயிற்சி :—3. யானை பெரியது ; பூனை சிறியது.
இதுபோல் மூன்று வாக்கியங்கள் எழுது.

பயிற்சி :—4. பூனைக்கு மரம் ஏறத் தெரியும்.
——மரம் ஏறத் தெரியாது.
பூனை பாலை நக்கிக் குடிக்கும்.
——நீரை——க் குடிக்கும்.

மேலே கோடிட்ட இடங்களை யோசித்து நிரப்பு.

32. படம் பார்த்து

விடை கூறுதல் - எழுதல்



1. தந்தை எங்கு எதன்மீது உட்கார்ந்திருக்கிறுர்?
2. அவர் என்ன செய்கிறுர் ?
3. அவர் பக்கத்தில் நிற்பவன் யார் ?
4. தந்தையின் பக்கத்தில் நிற்பவள் யார் ?
5. தந்தை தன்முன் என்ன காண்கின்றுர் ?
6. சிறுவனும் சிறுமியும் என்ன செய்கிறுர்கள் ?
7. தொட்டிக்குள் என்ன இருக்கின்றன ?
8. அவை எவற்ருல் செய்யப்பட்டன ?

9. அவற்றை யார் செய்திருப்பார்?
10. வெளியில் நிற்பவன் யார்?
11. அவன் கையில் என்ன வைத்திருக்கிறான்?
12. அவன் எதற்கு அங்கு வந்தான்?
13. அவன் தலையிலும் உடல்மேலும் இருப்பன எவை?
14. குடுகுடுப்பைக்காரன் என்ன சொல்லுவான்?

பயிற்சி:—1. கோடிட்ட இடங்களை நிரப்பு.

1. தந்தை சாய்வு——யில் உட்கார்ந்திருக்கிறார்.
2. தந்தை சிறுவர் விளையாடுவதைக்——குக் காட்டுகிறார்
3. ——தந்தையின்——த்தில்——.
4. தந்தையின்——நிற்பவள்——.
5. தந்தையின்——சிறுவனும் சிறுமியும் தண்ணீர்த்——யில் படகு——விளையாடுகிறார்கள்.
6. தொட்டிக்குள்——இருக்கின்றன.
7. அவற்றைத்——செய்திருப்பார்.
8. வெளியில் குடுகுடுப்பைக்காரன்——.
9. அவன்——யில் உடுக்கை——.
10. அவன்——கேட்க வந்திருக்கிறான்.
11. அவனிடம் தலையில் தலைப்பாகையும், மேல் சட்டையும் கந்தைத்——இருக்கின்றன.
12. 'நலம் வருகுது' 'நலம் வருகுது'——சொல்வான்.

பயிற்சி:—2. உங்கள் வீட்டுக்குப் பிச்சை எடுக்க வருபவர்களில் எத்தனை வகையாரைப் பார்த்திருக்கிறாய்? சொல்.

கூத்தாடி, பாம்பாட்டி, வித்தை காட்டுபவன், குரங்காட்டி.

33. நன்றியுள்ள நாய்



1. படத்தைப் பார்த்துக் கதையைக் கூறு.

2. கீழ்வரும் குறிப்பு வாக்கியங்களை வைத்துக் கொண்டு கதையை எழுது.

குறிப்பு :—

1. வியாபாரி குதிரை மீதேறிச் செல்லுதல் — நாய் தொடர்ந்து போதல்.
2. குதிரை தீனி தின்கிறது—வியாபாரி சாப்பிடுதல் —வியாபாரி தரையின்மேல் பணப்பை வைத்திருத்தல்.
3. நாய் படுத்திருத்தல்—வியாபாரி தூங்குதல்.
4. வியாபாரி குதிரை ஏறிச் செல்லுதல்—நாய் குரைத்தல்—பணப்பை மரத்தடியில் கிடத்தல்—வியாபாரி கையில் துப்பாக்கி.
5. வியாபாரி குதிரை மீதிருந்து நாயைச் சுடுதல்.
6. வியாபாரி போதல்—இரத்தம் ஒழுக நாய் பணப்பையிடம் வந்து நிற்றல்.
7. வியாபாரி வீடு அடைதல்—குதிரையைக் கட்டல்—பணப்பையைக் காணாது ஏங்குதல்.
8. வியாபாரி குதிரை ஏறி வருதல்—பணப் பையைப் பார்த்தல் — நாய் பக்கத்தில் இறந்து கிடப்பதைக் கண்டு வருந்துதல்.

'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு.' —பழமொழி

எதையும் ஆலோசித்துச் செய்யவேண்டும்.

நாய் எஜமானனிடம் நன்றியறிதலுடையது.

பயிற்சி :—1. ஒவ்வொரு படத்தையும் பார்த்துச் சில கேள்விகளை எழுது.

2. அடுத்த பையனை விடை சொல்லும்படி கேள்.

3. நீ அவற்றிற்கு விடை எழுது.

34. குருடனும் விளக்கும்

ஒருநாள் இரவு மிகவும் இருட்டாக இருந்தது. குருடன் ஒருவன் அந்த இரவில் தெருவழியே போனான். அவன் கையில் ஒரு விளக்கு இருந்தது; தலையில் நீர்க்குடம் ஒன்று இருந்தது.

அச்சமயத்தில் அவ்வழியே ஒரு வழிப்போக்கன் வந்தான். அவன் குருடனைப் பார்த்து, "அறிவில்லாதவனே, உனக்குத்தான் பகல் இரவு என்னும்

வித்தியாசம் தெரியாதே! உனக்கு விளக்கு எதற்கு? என் வீணாக அதனைச் சுமந்து செல்கிறாய்!" என்று ஏளனமாகக் கேட்டான்.

குருடன் சிரித்துக்கொண்டு, "ஐயா; அறிவுள்ளவரே, நான் கையில் பிடித்திருக்கும் விளக்கு எனக்காக அல்ல; உம்மைப் போன்றவர்க்காகவே. நீர் இந்த இருட்டில் என்மீது மோதி என் குடத்தை உடைத்துவிடாதபடி விளக்கைப் பிடித்துக் கொண்டு வருகிறேன்" என்றான்.

அதனைக் கேட்ட வழிப்போக்கன் வெட்கப்பட்டுத் தலை குனிந்து சென்றான்.

'சொல் சோர்வு படேல்'

சொற்கள் :—குருடன், இருட்டு, நீர்க்குடம், வழிப்போக்கன், வித்தியாசம், வீண், ஏளனம், மோதி, உடைத்தல்.

கேள்வி :—குருடன் வழிப் போக்கனுக் கூறிய பதில் என்ன? சொல்; எழுது.

பயிற்சி :—1. கோடிட்ட இடங்களில் வார்த்தைகளை நிரப்பு.

ஒரு——கையில்——எடுத்துக்கொண்டு——.

ஒருவன்——வந்தான்.

அவன், "குருடரே——க் கண் தெரியாதே; ——எதற்கு?" என்றான்.

அதற்குக்——, "ஐயா, என் —— உம்மைப் ——வந்து——விடாமல் இருக்க என் கை விளக்கு ——படுகிறது" என்றான்.

மற்றவன்——பட்டுத் தலை——சென்றான்.

35. பறவைகள்

வானத்தில் பறப்பன எல்லாம் பறவைகள். பறவைகளுக்கு இறக்கை உண்டு. அவை இறக்கைகளின் உதவியால் பறக்கின்றன. பறவைகள் எல்லாம் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்.



கருடன், கழுகு, பருந்து, புறா, குருவி முதலிய பறவைகள் வானத்தில் வெகு உயரத்தில் பறந்து

செல்லும். மயில், கோழி, வாத்து முதலிய பறவைகள் வானத்தில் உயரமாகப் பறப்பதில்லை.

காகம் இல்லாத ஊரே இல்லை. காகத்தை ஊர்த் தோட்டி என்று அழைப்பார்கள். அது தெருக்களி லுள்ள அசுத்தத்தை யெல்லாம் நீக்குகின்றது. காகத் திற்கு உணவுப் பொருள் கிடைத்தால், அது 'கா கா' என்று கரைந்து தன் இனத்தாரைக் கூவி அவற்றோடு உண்ணும். காகத்தின் இரண்டு கண்களுக்கும் ஒரு விழி இருப்பதைப் பார்.

மயில் மிகவும் அழகான பக்ஷி. அது தோகையை விரித்து ஆடும்போது பார்த்தால் மிகவும் அழகாக இருக்கும். மயில் இறகு மருந்துக்குப் பயன்படும்.

கிளி ஓர் அழகான பக்ஷி. மக்கள் கிளியைக் கூண்டில் அடைத்து வளர்ப்பது வழக்கம். கிளி, நாம் கற்றுக்கொடுப்பதுபோல் பேசும். 'சொன்னதைச் சொல்லுங் கிளிப் பிள்ளை' என்பது பழமொழி.

குயில் அழகாகப் பாடும். இனிய குரல் எடுத்துப் பாடுபவர்களுக்குக் குயிலை ஒப்பாகக் கூறுவர். புறா அழகான பக்ஷி. அது கூட்டங் கூட்டமாய் வானத்தில் பறந்து செல்வது பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

தீப்பறவை என்று ஒரு பறவை உண்டு. அது பாலைவனத்தில் சஞ்சரிக்கும். அது தனக்கு ஏதாவது

ஆபத்து வருமானல் தலையை மணலில் புதைத்துக் கொள்ளும். அவ்வாறு செய்துகொண்டால் பிறர் தன்னைப் பார்க்க முடியாது என்று அது எண்ணுகிறது.

வௌவாலை நீ பார்த்திருக்கிறாயா? அது குட்டி போட்டுப் பால் கொடுக்கும். அதற்கு இறக்கை உண்டு. குட்டிபோட்டுப் பால் கொடுப்பதால் வௌவால் விலங்கினத்தையும், இறக்கையைப் பெற்றுப் பறப்பதால் பறவை இனத்தையும் சேர்ந்ததென வௌவாலைக் கூறுவர். வௌவால் தலைகீழாகத் தொங்குவதை நீ பார்த்திருக்கிறாயா.

கேள்விகள்:—1. படத்தைப் பார்த்துப் பறவைகளின் பெயர்களைச் சொல்லு; எழுது.

2. உயரமாகப் பறக்கும் பறவைகள் எவை?

3. கோழி, காகம், மயில், கிளி, புறா, தீப் பறவை, வௌவால்—இவைகளைப்பற்றி இரண்டிரண்டு வாக்கியங்கள் எழுது.

பயிற்சி:—1. வானம்—இதற்கு வேறொரு பெயர் கூறு.

2. உயரமாக, தாழ்வாக—இவைகளை அமைத்து வாக்கியங்கள் எழுது.

3. காக்கையிடம் காணும் குணம் என்ன?

4. இப்படத்தில் வந்துள்ள பழமொழிகளை எழுது.

36. உபாயத்தால் ஆகாதது ஒன்றில்லை



மரங்கள் அடர்ந்த காடதனில்
மரமொன் றதனி லிருகாகம்
ஆணும் பெண்ணும் ஆயிரண்டும்
அன்பாய் வாழ்ந்து வந்தனவே. 1

கூடு கட்டி முட்டையிட்டுக்
கூடி வாழும் நாட்களிலே
மரப்பொந் ததனில் வாழ்நாகம்
மதித்தேமுட்டையை அழித்ததுவே. 2



காகம் கண்டு கவலையுற்றே
காட்டு நண்பனும் நரியைக்கண்டே
யாதோ செய்வேன் இதற்கெனவே
நரியும் தந்திரம் நவின்றதுவே. 3



அரசன் தேவி அணிந்திடும் நல்
ஆபர ணங்கொண்டு பொந்திலிடு ;
அரசன் சேவகர் பொந்தழித்தே
அரவம் அதையும் கொன்றிடுவார். 4



என்ற மொழிகேட் டக்காகம்
ஏகியே அரசன் அரண்மனைக்கே
பொன்னணி தன்னை எடுத்து வந்து
பொந்தில் போடவும், காவலர்கள் 5



விரைந்து வந்து பொழிந்தழிக்க,
விரைவில் பாம்பும் வெளிவரவே,
காவலர் கொல்லக் காகங்கள்
கண்டு மகிழ்ந்து களித்தனவே. 6

பயிற்சி :—1. கோடிட்ட இடங்களை நிரப்பு.

ஒரு——இருந்தது. மரங்கள் பல இருந்தன.

அந்தக் காட்டில்——மரத்தில்——காகங்கள்——.

அவற்றின் முட்டைகளைப்——ஒன்று தின்று——.

அந்தப் பாம்பு மரத்தின்கீழ்ப்——வசித்து வந்தது. அதனால் காகங்கள் வருந்தின.

காகத்தினிடம் ——ஒன்று வந்தது.

"பாம்பினிடமிருந்து தப்பிப் —— வழி என்ன ?" என்று காகம் நரியைக்——.

அதற்கு——, "நீ அரசன்——க்குச்——பொன்—— ஒன்றை—— வந்து புற்றில்——. அப்போது புற்றைச்——அழிப்பார்கள். ——வெளியே ——. அதனைச்——கொன்று விடுவார்கள்," என்றது. காகம்——யே செய்தது. அரசன் ——வந்து புற்றை அழித்தார்கள். பாம்பு ——யே வந்தது. அதைச்——கொன்றனர். —— யின் தந்திரத்தால் காகங்கள் —— வாழ்ந்தன.

பயிற்சி :—2. மரத்தின்மேல், மரத்தின்கீழ், புற்றிற்குள், புற்றிற்குவெளியே, அரண்மனைக்குப் பக்கத்தில், அரண்மனைக்குத் தூரத்தில், அரண்மனையை விட்டு, அரண்மனையிலிருந்து — மேல், கீழ், உள், வெளி, பக்கம், தூரம், விட்டு, இருந்து—இவற்றை அமைத்து மேலே காட்டியபடி சொந்தமாக எழுது.



37. நரியும் ஆட்டுக் குட்டியும்

ஒரு குடியானவன் தோட்டத்தில், பல ஆடுகளும் அவற்றின் குட்டிகளும் இருந்தன. ஒருநாள் தோட்டத்தின் ஓரத்தில் ஆட்டுக்குட்டி ஒன்று நின்றுகொண்டிருந்தது. அப்போது ஒரு நரி அங்கு வந்தது.

நரி, தன்னைக் கொன்றுவிடும் என்று அந்தக் குட்டிக்குத் தோன்றியது. ஆனால் அது தைரியத்தை இழக்கவில்லை. அது நரியைப் பார்த்து, "நரியாரே நீர் என்னைக் கொல்லப் போகிறீர் என்று எனக்குத் தெரியும். ஆனால், நான் உம்மை ஒன்று வேண்டிக் கொள்கிறேன். நீர் நன்றாய்ப் பாடுவீர் என்று நான்

கேட்டிருக்கிறேன். நீர் ஒரு பாட்டுப் பாடும். நான் கேட்டுவிட்டு உமக்கு இரை ஆகிறேன்" என்றது.

நரி மிகவும் மகிழ்ந்தது; உடனே பாடவும் தொடங்கியது. அதன் குரலைக் கேட்டதும் தோட்டத்தில் இருந்த நாய்கள் ஓடி வந்து அதைக் கொன்றன.

ஆட்டுக்குட்டி சிரித்துக்கொண்டு தாயிடம் ஓடிற்று.

'புத்தியிருந்தால் ஆபத்தினின்றும் தப்பலாம்.'

'வீண் புகழ்ச்சியை விரும்பினால் ஏமாற்றம் அடைவர்.'

பயிற்சி :—1. இந்தக் கதையைப் படி. (8 நிமிஷங்கள்) சொல்லு; எழுது.

2. இந்தக் கதையால் அறியும் நீதி யாது?

பயிற்சி :—3.

காட்டில் நரி	வீட்டில் ஆடு

எது எது எங்கெங்கு வசிக்கும்—நேருக்கு நேராய் எழுது.

பூனை	புலி
எலி	யானை
காகம்	மயில்
குயில்	சிங்கம்
பசு	நரி
எருது	ஓநாய்
கழுதை	கரடி

பயிற்சி :—4. படத்தில் காண்பவற்றைத் தனித்தனி வாக்கியங்களாக எழுது.

38. எங்களது நாடு

'செந்தமிழ் நாடெனும் போதினிலே'—என்ற மெட்டு

செந்தமிழ் நாடெனு மிந்நாட்டை—நான்
சிந்தை மகிழப் போற்றுவனே—அந்தன்
அன்னை தமிழ்நா டெனும்போதே—என்
ஆசை பெருகுது உள்ளமதில். 1

கும்பன் பிறந்த தமிழ்நாடு—உயர்
கம்பனும் வாழ்ந்த தமிழ்நாடு—நாளும்
அம்புவி யோர்போற்றும் குறளையளித்த—நல்
ஆரியன் வாழ்ந்த தமிழ்நாடு. 2

கல்வி மிகுந்த தமிழ்நாடு—பெண்ணின்
கற்புச் சிறந்த தமிழ்நாடு—உயர்
காப்பியம் மலிந்த தமிழ்நாடு—தூய
வள்ளல்கள் நிறைந்த தமிழ்நாடு. 3

செல்வம் மலிந்த தமிழ்நாடு—உயர்
பல்வளம் மல்கிய தமிழ்நாடு—நற்
புலவர்கள் சிறந்த தமிழ்நாடு—புகழ்
மேவிப் பொலியும் தமிழ்நாடு. 4

39. தபால்

மாதவனும் கேசவனும் நடந்து சென்றார்கள். மாதவன் கேசவனை, "இன்று எனக்கு நல்ல விஷயம் ஒன்றைப்பற்றிச் சொல்" என்று கேட்டான்.

கேசவன் :—'தபால்' என்பதைப்பற்றி உனக்கு இன்று சொல்கிறேன்; கேள்.

கேசவன் :—தபால் என்பது வேறு ஊர்களிலிருப்பவரோடு கடிதங்கள் மூலமாய் விஷயங்களைத் தெரிந்து கொள்ளுமாறு ஏற்படுத்தி இருக்கும் வசதியாகும். முக்கியமான ஒவ்வோர் ஊரிலும் 'தபாலாபீஸ்' என்பது ஒன்று உண்டு. அங்குக் கார்டு, கவர் முதலியவற்றை விற்கிறார்கள். கார்டின் விலை ஒன்பது பை, அல்லது முக்காலணா. கவரின் விலை ஓர் அணா. கார்டில் ஒரு புறத்தில் நாம் விஷயங்களை எழுத வேண்டும். மற்றோர் புறத்தில் யாருக்கு எழுதுகிறோமோ அவருடைய விலாசத்தை எழுத வேண்டும்.

மாதவன் :—கவர் என்றாயே. அது எப்படி உபயோகப் படுகிறது ?

கேசவன் :—கார்டில் கொஞ்சம் விஷயந்தான் எழுதலாம். கார்டில் இரகசியமான விஷயங்களை எழுத முடியாது அல்லவா ! விஷயம் அதிகமாயிருந்தாலும்,

பிறர்க்குத் தெரியக் கூடாததாயிருந்தாலும் அதற்குக் கவர் உபயோகமாகிறது. நாம் எழுத வேண்டிய விஷயத்தை ஒரு தனிக் கடிதத்தில் எழுதி மடித்துக் கவருக்குள் போட்டுக் கவரின் வாயை ஒட்டிவிட



வேண்டும். பிறகு கவரின் மேற்புறத்தில் யாருக்கு எழுதுகிறோமோ அவருடைய விலாசத்தை எழுதித் தபால் பெட்டியில் போட வேண்டும் அதனைப் பெற்றுக் கொள்பவர்தான் விஷயத்தை அறிவார். பிறர் அறிய முடியாது.

மாதவன் :—தபால் பெட்டி எங்கிருக்கிறது?

கேசவன் :—தபால் பெட்டி தபாலாபீஸில் இருக்கிறது. தெருக்களிலும் ஜனங்களுக்குச் சௌகரியமாகத் தபால் பெட்டிகளை வைத்திருக்கிறார்கள். அவற்றில் நாம் எழுதிய கார்டு கவர்களைப் போட்டால் குறித்த காலத்தில் தபால்காரன் அப்பெட்டிகளைத் திறந்து கடிதங்களை எடுத்துச் செல்வான். அவற்றின் மேல் தபால் தலைகள் உள்ளன அல்லவா? அத்தலைகளின் மீது அந்த ஊரையும் தேதியையும் குறிக்கும் முத்திரையைக் குத்துவான். பிறகு கடிதங்களை ஊர் ஊராகப் பிரித்துப் பைகளில் போட்டுக் கட்டப்படும்.

மாதவன் :—அந்தப் பைகளை என்ன செய்வார்கள்?

கேசவன் :—அந்தப் பைகளை ரயில்வண்டி மூலமாக ஒவ்வோர் ஊருக்கும் அனுப்புவார்கள்.

மாதவன் :—ரயில் இல்லாத ஊர்களுக்கு எப்படித் தபால் கட்டுகளை அனுப்புவார்கள்?

கேசவன் :—ரயிலில்லாத ஊர்களுக்குத் தபால் கட்டுகளைக் குதிரை வண்டி மூலமாகவும், மோட்டார் மூலமாகவும், ஆள் மூலமாகவும் அனுப்புவார்கள்.

மாதவன் :—கடிதங்கள் நமக்கு எப்படி வந்து சேருகின்றன?

கேசவன் :—தபால் கட்டுக்களை ரயிலிலிருந்து தபாலாபீஸுக்குக் கொண்டு வருவார்கள். அங்கு

அக்கட்டுக்களை அவிழ்த்துக் கடிதங்களை எடுப்பார்கள். பின், முத்திரை குத்துவார்கள். தபால்காரன் நமக்குக் கடிதங்களைக் கொண்டுவந்து கொடுப்பான்.

மாதவன் :—தபாலினால் இன்னும் ஏதேனும் நன்மைகள் உண்டோ ?

கேசவன் :—தபாலினால் இன்னும் பல நன்மைகளை நாம் பெறுகிறோம். தபால் மூலமாய்ப் பணம் அனுப்பலாம். அவசரமான விஷயங்களைத் தந்தி மூலமாய்த் தெரிவிக்கலாம். அவற்றை யெல்லாம் பின் ஒரு சமயம் சொல்கிறேன்.

கேள்வி :—1. கார்டு, கவர் — இவற்றைப் பற்றி இரண்டு இரண்டு வாக்கியங்கள் எழுது.

2. தபால் எப்படி அயலூர்க்குச் செல்கிறது ?

பயிற்சி :—1. கீழ் வரும் வார்த்தைகளை அமைத்துத் தனித் தனி வாக்கியங்கள் எழுது.

விஷயம், மூலம், முக்கியம், விலாசம், இரகசியம்,
ஒட்டுதல், சௌகரியம், அவிழ்த்து.

பயிற்சி :—2. கார்டு, கவர்கள் எங்கு கிடைக்கும் ? என்ன விலை ?

பயிற்சி :—3. தபால் தலைகளில் (ஸ்டாம்புகளில்) நீ எவ்வளவு வகை பார்த்திருக்கிறாய்? எழுது.

பயிற்சி —4. ஒரு கடிதம் எழுதித் தபால் பெட்டியில் நீ போட்டால் அது எவ்வாறு போய்ச் சேர்கிறது ? சொல்; எழுது.

40. படமும் கதையும்



பயிற்சி—படத்தைப் பார்த்துக் கதையைச் சொல்.

ஆத்திசூடி

1. அறஞ்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண்ணெழுத் திகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டு உண்.
10. ஒதுவது ஒழியேல்.
11. ஔவியம் பேசேல்.
12. கண்டு ஒன்று சொல்லேல்.
13. தந்தை தாய்ப் பேண்.
14. நன்றி மறவேல்.
15. இளமையிற் கல்.
16. செய்வன திருந்தச் செய்.
17. தெய்வம் இகழேல்.
18. நன்மை கடைப்பிடி.
19. நோய்க்கு இடங்கொடேல்.
20. பெரியாரைத் துணைக்கொள்.
21, மேன்மக்கள் சொற்கேள்.
22. வித்தை விரும்பு.

உலகநீதி

1. ஓதாமல் ஒரு நாளும்
இருக்க வேண்டாம்.

2. ஒருவரையும் பொல்லாங்கு
சொல்ல வேண்டாம்.

3. மாதாவை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.

4. நெஞ்சாரப் பொய்தன்னைச்
சொல்ல வேண்டாம்.

5. அஞ்சாமல் தனிவழியே
போக வேண்டாம்.

6. கற்றவரை ஒரு நாளும்
பழிக்க வேண்டாம்.

7. மூத்தோர் சொல் வார்த்தைதனை
மறக்க வேண்டாம்.

8. இறந்தாலும் பொய்தன்னைச்
சொல்ல வேண்டாம்.

9. செய்த நன்றி ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.

10. தெய்வத்தை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.

47, தம்பு செட்டித் தெரு,
சென்னை.
25—10—1939.

அன்புள்ள தந்தையே,

சிறுவன் செல்வநாதன் நமஸ்கரித்து எழுதும் கடிதமாவது :—

நேற்று மாலை நானும் மாமாவும் இவ்விடம் வந்து சேர்ந்தோம். இவ்விடத்தில் எல்லோரும் சுக மாய் இருக்கிறார்கள். நான் ரயிலில் வரும்பொழுது அநேக விநோதங்களைப் பார்த்தேன். ரயில் பிர யாணம் எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. மாமா எனக்கு யாவற்றையும் எடுத்து விளக்கிச் சொல்லிக் கொண்டு வந்தார். அவர் எனக்கு அநேகத் தின்பண் டங்கள் வாங்கித் தந்தார். மாமி என்னை விருப் போடு அழைத்தாள். நானும் குணசேகரனும் மாமா வும் நாளையதினம் நாடகம் பார்க்கப்போகிறோம். நான் இந்த விடுமுறையை இந்த வருடம் இங்கு இன்பமாய்க் கழிப்பேன். வேறு விசேஷமில்லை. என் நமஸ்காரத்தை அம்மா, அண்ணாவிடம் சொல்ல வும். குஞ்சுப் பாப்பாவிற்கு என் முத்தம். அடிக்கடி கடிதம் எழுதக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
அன்பும் கீழ்ப்படிதலுமுள்ள
மகன்
செல்வநாதன்.

விலாசம் :

திருவாளர்,
நாகராஜ முதலியார் அவர்கள்
87, பெரிய வீதி,
தாராபுரம்.